# பாரதமணி

மணி - 24 ஓசை - 6 ஜனவரி - 2011 விலை ரூ.10



ஆர். வெங்கடராமன்

# குணத்தால் குன்றேறி நிற்கும் குடியரசுத் தலைவர் ஆர்.வி.



* திரு. காமராஜ் மந்திரி சபையில் தொழில் அமைச்சராக திரு. ஆர். வெங்கட்ராமன் (ஆர்.வி.) இருந்த காலம் தமிழ்நாட்டின் பொற்காலம்.

* தமிழ்நாட்டுக்கு எட்டு பஞ்சாலைகள் நிறுவ ஜப்பானிய கம்பெனியுடன் பேச்சு நடத்த தமிழ்நாட்டிலிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் ஜப்பான் சென்றார். பேச்சு வார்த்தைகள், பண பேரம் எல்லாம் முடிந்து விட்டன. தமிழக அதிகாரியிடம் ஜப்பானிய தூது கோஷ்டித் தலைவர் ரகசியமாக ஏதோ சொன்னார். "பஞ்சாலைகள் விலை பேரத்தில் 12% கமிஷன் பணத்தை என்ன செய்வது, யாரிடம் தருவது" என்று கேட்டார் ஜப்பானிய அதிகாரி.

* "கமிஷன் தரும் பணத்திற்குப் பதிலாக 9-வது பஞ்சாலையைத் தந்து விடுங்களேன்" என்று சடாரென்று பதிலளித்தார் தமிழக அதிகாரி. ஜப்பானிய கோஷ்டித் தலைவருக்கு ஒரே வியப்பு! லஞ்சம் வாங்காத இப்படியும் ஒரு அதிகாரியா! அதிகாரியின் நாணயத்தைக் கண்டு மெச்சினார். கமிஷன் பணத்திற்கு பதிலாக 9-வது பஞ்சாலை தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது.

* தமிழக சட்டசபையில் இந்த பஞ்சாலை பேரம் பற்றிய விவாதம் நடந்தது.

எதிர்க் கட்சியினர் தொழில் அமைச்சர் ஆர்.வி. யிடம் இந்த மில் பேரத்தில் கமிஷன் ஏதாவது வாங்கினீர்களா என்று கேட்டனர்.

"ஆம், கமிஷன் வாங்கினோம். தமிழ் நாட்டுக்கு வரப்போகும் 9-வது பஞ்சாலை தான் அந்தக் கமிஷன் தொகை" என்று தைரியமாகப் பெருமிதத்துடன் பதிலளித்தார் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன். மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்?

இப்படிப்பட்ட நேர்மையும் நாணயமும் மிக்க தமிழ்ப் பெருமகன் திரு. ஆர். வெங்கட்ராமன் (ஆர்.வி.) இன்று பாரத நாட்டின் 8-வது குடியரசுத் தலைவராக அரியாசனத்தை அலங்கரிக்கிறார். தமிழ்நாடு பெருமையால் பூரித்து தலைநிமிர்ந்து நிற்கிறது.

* எப்பொழுதுமே புன்சிரிப்புத் தவழும் இன்முகம்; உறுதியான கற்பாறை-அதனுள் இனிய நீர்ச்சுனை. வக்கீல் தொழில் நடத்திப்

## அட்டைப்படம்

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் (4-12-1910 - 27-1-2009) அவர்களின் நூற்றாண்டையொட்டி அன்னாரது புகைப்படம் அட்டையில்.


**பாரதமணி**

*காந்திய மாத இதழ்*

"முழு அரசியல் சுதந்திரத்துடன் முழு பொருளாதாரச் சுதந்திரத்தையும் பெற்று அனைத்து மக்களும் வாழவேண்டும் என்பதே பூரண சுயராஜ்யமாகும்".

– மகாத்மா காந்தி

புரவலர் :
**அருட்செல்வர் நா. மகாலிங்கம்**

கௌரவ ஆசிரியர் :
**லா.சு. ரங்கராஜன்**

ஆசிரியர் :
**பி.என். ஸ்ரீனிவாசன்**

இணை ஆசிரியர்கள் :
**ராஜம் கிருஷ்ணன்**
**ஹரிஹர சுப்ரமணியம் (மித்ரஹரி)**

பதிப்பாளர் :
**P.N. ஸ்ரீனிவாசன்**
(C/o. ஜி.எல். கிராபிக்ஸ்)
9/5, சாமி ஆசாரி தெரு,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014.

ஆலோசகர்கள் :
**என்.எஸ். ஜெகந்நாதன்**
**இந்திரா பார்த்தசாரதி**
**கி. கஸ்தூரி ரங்கன்**

அச்சிட்டோர் :
**G. ரங்கராஜன்**
**G.L. கிராபிக்ஸ்**
9/5, சாமி ஆசாரி தெரு,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014.

சந்தா விவரம் :
ஆண்டுச் சந்தா : ரூ.100/-
ஆயுள் சந்தா : ரூ.1000/-
கடிதம் / மணியார்டர் / காசோலை
('பாரதமணி' என்ற பெயரில்)
அனுப்பவேண்டிய முகவரி :

**பாரதமணி**
நிர்வாக அலுவலகம்
1, 5வது குறுக்குத் தெரு,
சர்வமங்களா நகர்,
சிட்லபாக்கம்,
சென்னை - 600 064.
போன் : 22234453
E-mail : bharathamani@hotmail.com

# உழைப்பால் உயர்ந்த ஓர் உத்தமத் தலைவர்

டாக்டர் மா.பா. குருசாமி

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ஒருவர். ஓய்வறியா உழைப்பால், தளராத தொண்டால், மக்கள் நலம் பேணிய பண்பால் காந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர் வரை உயர்ந்து, சீரோடும் சிறப்போடும் வாழமுடியுமென உலகிற்கு உணர்த்திய ஒரு மாமனிதர் மாண்புமிகு இராமசுவாமி வெங்கட்ராமன் ஆவார். மக்களால் ஆர்.வி. என்று அன்போடும், மரியாதையோடும் அழைக்கப் பெற்ற அவரின் வாழ்க்கை எல்லோராலும் எண்ணிப் பார்க்கத்தக்கது. ஏனெனில், அவரது வாழ்க்கையில் பொதிந்து கிடக்கின்ற பாடங்கள் பலருக்கும் வழிகாட்டத் தக்கவை.

இன்று ஒருவரை அரசியல்வாதி என்றாலே, அவர் சந்தர்ப்பவாதி, சூழ்ச்சிக்காரர், தனிப்பட்ட கொள்கை அற்றவர். அதிகார வேட்கை கொண்டவர் என்றெல்லாம் எண்ணத் தோன்றுகின்றது. ஆனால், அரசியல்வாதி என்றால் நாட்டுக்கு உழைக்கும் நல்ல தொண்டன், கிடைக்கின்ற பதவிகளை தொண்டு செய்யக் கிடைக்கும் வாய்ப்பாகக் கருதுபவன் என வாழ்ந்த வாழ்க்கையின் மூலம் உறுதிபட உணர்த்தியவர் திரு. வெங்கட்ராமன். அவர் மண்ணுலகில் 98 ஆண்டுகள் வாழ்ந்தார். அறுபது ஆண்டுகளுக்கு மேல் சுறுசுறுப்பாக அரசியல்வாதியாகச் செயல்பட்டார். அவரது சுதர்மம் அரசியல். அதனை அவர் மேற்கொண்ட முறை உயர்வானது, ஆதலால் அவர் சீரும், சிறப்பும், பெயரும் புகழும் பெற்றார்.

### அறிவும் திறமையும்

திருமிகு ஆர். வெங்கட்ராமன் தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில், பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள இராஜமடம் கிராமத்தில் 1910 ஆம் ஆண்டு டிசம்பர் நான்காம் தேதி பிறந்தார். அவரது தந்தையார் பெயர் இராமசுவாமி.

இவரது பள்ளிக் கல்வி, பிறந்த வட்டாரத்தில் தொடங்கியது. கல்லூரிக் கல்வி சென்னையில். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் பாடத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார். அவர் நிதி, வங்கி இயலையும், பொது நிதியையும் சிறப்புப் பாடங்களாகக் கற்றுத் தேர்ந்தார். அவர் நுட்பமாகப் பெற்ற பொருளியல் அறிவு, பின்னாளில் அவர் மற்றவர்கள் போற்றும் வகையில் தொழிற்சங்கப் பணிகளைச் செய்ய, நிதியமைச்சராக விளங்கத் துணை செய்தது.

படிக்கின்ற காலத்தில் அவர் வளர்த்துக் கொண்ட ஒரு தனித்திறன் பேச்சாற்றல் ஆகும். கல்லூரி, பல்கலைக் கழக நிலையில் பேச்சுப் போட்டிகளில் பங்கு பெற்று பல பரிசுகளைப் பெற்றார். சொல்லுகின்ற கருத்துக்கு வளமும் வலிவும் சேர்க்கின்ற பேச்சாற்றல் பின்னாளில் அவர் சிறந்த வழக்கறிஞராக, ஆற்றல் மிக்க நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, உலகப் பேரவைகளில் இந்தியப் பிரதிநிதியாகத் திறமையுடன் செயல்படக் கைகொடுத்தது. மென்மையாக, ஆனால் சொல்லும் கருத்தை வண்மையாகக் கூறும் பேச்சுக்கலையைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டார்.

சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். 1935 ஆம் ஆண்டு, தனது இருபத்தைந்

---

பிரபலமடைந்தவர். தொழிலாளரின் உற்ற நண்பர்; தோழர் - தொழிற்சங்கங்களில் ஈடுபாடு கொண்டவர். தீவிரமான கொள்கைப் பற்றும் பிடிப்பும் மிக்கவர். ஆனால் வெளியே எதையும் காட்டிக் கொள்ள மாட்டார். மக்களிடம் அன்பும் அபிமானமும் கொண்டவர். எந்தப் பதவியில் இருந்தாலும் பழமையை மறக்காத பண்பாளர்.

* பெருந்தலைவர் காமராஜரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். தமிழ் நாட்டைத் தொழில் மயமாக்கிய சிற்பி.
* குலசேகரப்பட்டினம் சதி வழக்கில் காசி ராஜனுக்கும், ராஜகோபாலனுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டது. இவர்கள் தூக்கில் தொங்க 3 நாட்கள் தான் இருந்தன. ஆனால் ஆர்.வி. யின் சட்ட மூளை ஒரு யுக்தியைக் கண்டுபிடித்ததால் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட்டது.
* எந்தப் பிரச்சினையானாலும் நிதானமாக சீர் தூக்கி அலசிப் பார்த்து முடிவுக்கு வரும் இயல்பினர்.
* அரசியல் சாஸனத்தையும், சட்டத்தையும் மதித்து நடக்கும் பெருந்தகையாளர், தமது அதிகாரத்தை, உரிமையை சீராகப் பயன்படுத்துவார். மோதலைத் தவிர்த்து தமது கனிவான பேச்சினால் எதிரியையும் கவர்வதில் சமர்த்தர்.
* குடியரசுத் தலைவர் 'ஆர்.வி.'யின் பதவிக் காலத்தில் பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் சுமுகமான உறவும் சீரான போக்கும் நிலைத்து பாரத நாடு பீடுநடை போடுமென்று உறுதியாக நம்பலாம்.

'ஜெய்ஹிந்த்'
-('பாரதமணி', 15-8-1987)

தாம் வயதில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டார். 1951இல் உச்ச நீதிமன்றத்தில் வழக்குரைஞராக உயர்ந்து நின்றார்.

**எழுச்சியும் ஏற்றமும்**

திரு. ஆர். வெங்கட்ராமன், அவருக்கிருந்த அறிவாற்றலுக்கும் திறமைக்கும் வழக்கறிஞர் தொழில் மூலம் பணம் தேட எண்ணியிருந்தால், அந்தக் காலத்தில் இலட்சக்கணக்கில் செல்வத்தைத் தேடி இருக்க முடியும். ஆனால் அவர் உள்ளத்தில் தோன்றிய நாட்டுப் பற்று விடுதலை வேட்கையாக கொழுந்துவிட்டு எரிந்தது.

1942இல் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் இந்திய தேசியக் காங்கிரஸ், "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை நடத்தியது. காந்தியடிகளிடம் உள்ளம் பறிகொடுத்த ஆர்.வி. நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவரைக் கைது செய்த ஆங்கிலேய அரசு அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

1944ஆம் ஆண்டு சிறையிலிருந்து வெளிவந்தவர், தொழிலாளர் நலனில் தனிக்கவனம் செலுத்தினார். தமிழ்நாடு மாநிலக் காங்கிரசின் தொழிலாளர் அமைப்புப் பிரிவில் பொறுப்பேற்றுச் செயல்பட்டார். தொழிலாளர் சட்டத்தில் வல்லுநராகி, தொழிலாளர்களுக்காகவும், தொழிற் சங்கங்களுக்காகவும் கட்டணம் எதுவும் பெறாமல் நீதிமன்றங்களில் வாதாடினார்.

தோட்டம், பொறியியல், வாணிபத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புக்களின் தலைவராகி, தொழிலாளர் நலன்களைக் காக்கப்பாடுபட்டார். இவரது தொழிற்சங்கப் பணிகளை தொழிலாளர் அமைச்சராக இருந்தத வி.வி. கிரி பாராட்டி, தொழிலாளர் சட்ட இதழ் ஒன்றைத் தொடங்கி நடத்தத் தூண்டினார். 1949இல் இவர் நடத்திய 'தொழிலாளர் சட்ட இதழ்' (Labour Law Journal) எல்லோராலும் பயனுடையதாகக் கருதப் பெற்றது.



'பாரதமணி' ஆசிரியர் ஜனாதிபதி ஆர்.வி.யுடன்.

சென்னை நீதிமன்றத்திலிருந்த சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராக திரு. ஆர்.வி. கருதப்பட்டார். 1946இல், மலேசியா, சிங்கப்பூரில், ஜப்பான் படையெடுப்பின் போது பங்கு பெற்றதற்காக சில இந்தியத் தேசியவாதிகள் மீது இராணுவக் குற்றம் சுமத்தப்பட்டது. அவர்களுக்காக வாதாடி மீட்க, இந்தியாவிலிருந்து, பம்பாயைச் சேர்ந்த நாரிமன், சென்னையைச் சேர்ந்த பாஷ்யம், அலகாபாத்தைச் சேர்ந்த பாப்ரூ போன்ற புகழ் பெற்ற வழக்கறிஞர்களைக் கொண்ட குழு சென்றது. அந்தக் குழுவில் திரு.ஆர்.வி.யும் இடம் பெற்று, மலேசியா, சிங்கப்பூர் சென்றார். இது அவரது வழக்கறிஞர் பணிக்குக் கிடைத்த பெருமை; போற்றுதல் ஆகும்.

**அரசியலும் பொறுப்பும்**

அருமையாகத் தொழிற்சங்கப் பணிகளைச் செய்ததால் அரசியல் தலைவர்களின் நட்பும், தொடர்பும் ஏற்பட்டன. இவரது சட்ட அறிவின் நுட்பத்தை அறிந்த தேசியத் தலைவர்கள் இவரை நாட்டுப் பணியில் மேலும், மேலும் ஈடுபடுத்த எண்ணினர். இந்தியக் குடியரசின் அரசியல் நிர்ணய சட்டப் பேரவையில் இவரும் உறுப்பினரானார். இந்தியக் குடியரசின் சட்டத்தை வடிவமைத்ததில் இவருக்கும் பங்குண்டு. பின்னாளில், இந்தியக் குடியரசின் தலைவராகி, நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு வந்த பொழுது, அதனைச் சிறப்பாகச் செய்ய இந்தப் பங்களிப்பும் ஒரு காரணமாயிற்று.

1950இல் அமைந்த தற்காலிக நாடாளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்பொழுது நாடாளுமன்றத் தலைவராக இருந்த மாண்புமிகு மாவலங்கர் திரு.ஆர்.வி.யின் பங்களிப்பால் மிகவும் கவரப்பட்டார். நியூசிலாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் நாடாளுமன்றப் பேரவைக் கூட்டத்திற்குச் சென்ற இந்தியக் குழுவில் ஓர் உறுப்பினராக திரு.ஆர்.வி.யையும் அனுப்பி வைத்தார்.

1952இல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் இவர் தஞ்சாவூர் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். நாடாளுமன்ற விவாதங்களில் சுறுசுறுப்பாகப் பங்கு கொண்டார். தயங்காமல் தனது கருத்துக்களை எடுத்துரைத்தார். 1953-54ஆம் ஆண்டில் காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் செயலாளராகப் பணியாற்றினார். 1952இல் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு நடத்திய உலக வாணிபக் குழுக் கூட்டத்தில் தொழிலாளர்களின் சார்பாகப் பங்கேற்றார்.

**தமிழக முன்னேற்றத்தில் தனிப்பங்கு**

1957ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மறுபடியும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்பொழுது தமிழக அரசியலில் ஒரு பெருந்திருப்பம் ஏற்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்தில் முதலமைச்சர் ஆனார். அவர் திரு.ஆர்.வி.யைத் தனது அமைச்சரவையில் பங்கு பெற அழைத்தார். அவரும் அதனை ஏற்று, நாடாளுமன்ற

உறுப்பினர் பதவியைத் துறந்து விட்டு தமிழக அமைச்சரானார்.

அவர் தொழில்கள், தொழிலாளர், கூட்டுறவு, மின்சாரம், போக்குவரத்து, வாணிப வரித் துறை ஆகிய துறைகளின் அமைச்சரானார். இப்பொழுது ஐந்து அமைச்சர்கள் நிர்வகிக்கின்ற துறைகளை ஓர் அமைச்சராக இருந்து சிறப்பாகக் கவனித்துக் கொண்டது அவரது திறமைக்குச் சான்று. 1957 முதல் 1967 வரை தமிழகம் தொழில் துறையில் முன்னேற சிறந்த அடித்தளம் அமைத்த பெருமை அவரைச் சேரும்.

இந்தக் காலத்தில் சென்னை சட்டமன்ற மேலவையின் தலைவராகவும் இருந்து போற்றுதற்குரிய வகையில் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தொடர்ந்த பணிகள்; துவங்கிய திறமை**

1967இல் மாநிலப் பணிகளிலிருந்து விடுபட்டு, மறுபடியும் மத்திய அரசின் பணிகளில் ஈடுபட்டார். இந்தியத் திட்டக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். தொழில், தொழிலாளர், மின்சாரம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, இரயில்வே ஆகிய துறைகளின் வளர்ச்சித் திட்டங்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அப்பொழுது ஐந்தாண்டுத் திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் இந்திய அரசு மிகவும் கவனம் செலுத்தியது. திரு.ஆர்.வி. தான் பெற்ற அனுபவ அறிவின் அடிப்படையில் திட்டமிட்ட வளர்ச்சிக்குச் சிறப்பாகத் துணை நின்றார். 1971 வரை இப்பணி தொடர்ந்தது.

1977இல் திரு.ஆர்.வி. தெற்கு சென்னைத் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினராகச் செயல்பட்டார்.

அவர் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பொறுப்புக்களை ஏற்று திறம்படச் செயல் பட்டது குறிப்பிடத்தக்கது. மத்திய அமைச்சரவையின் அரசியல் நடவடிக்கைக்குழு, பொருளாதார நடவடிக்கைக் குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருந்திருக்கின்றார். பன்னாட்டு பண நிதி, மறுநிர் மாண, வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றில் இயக்குநராகப் பொறுப்பு வகித்திருக்கின்றார்.

1980இல் மீண்டும் இந்திய மக்களவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். திருமதி இந்திரா காந்தி அமைச்சரவையில் முதலில் நிதி அமைச்சராகவும், பின்பு பாதுகாப்பு அமைச்சராகவும் செயல்பட்டார். அவர் பாதுகாப்பு அமைச்சராக இருந்த பொழுது, இந்திய இராணுவத்தின் ஆற்றலைப் பெருக்கப் புதிய திட்டங்களை மேற்கொண்டார். அவரது பணிகள் பலராலும் பாராட்டப்பட்டன.

# காந்தி தர்சன் யாத்திரை

**"பாரதமணி"** ஆசிரியரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பி.என். ஸ்ரீனிவாசனை நிர்வாக அறங்காவலராகக் கொண்ட காந்தி தரிசன கேந்திரம் என்ற அமைப்பு நாட்டு மக்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம் தேச பக்தியை வளர்க்கவும், காந்திய எண்ணங்கள் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும் கடந்த 10 ஆண்டுகளாக காந்தி தரிசன யாத்திரை என்ற நிகழ்ச்சிகளை செய்து வருகிறது. இதில் ஏராளமான இளைஞர்கள் பங்கேற்று பயன் பெற்றிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு காந்தி தரிசன கேந்திரம் மத்திய அரசின் தேசிய இளைஞர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காந்திய பணிகளில் ஆர்வமுள்ள 13 -19 வயதுள்ள இளைஞர்களை காந்தி தர்சன் யாத்திரை அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இந்த யாத்திரை 2011 ஜனவரி 20ம் தேதி துவங்கி 2011 ஜனவரி 29ம் தேதி வரை 10 தினங்கள் நடைபெறவுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 50 இளைஞர்கள் தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரளாவில் காந்தியப் பணியில் ஈடுபட்டுள்ள சிறந்த



நிறுவனங்களைச் சென்று பார்வையிட்டு காந்தியப் பணிகளைத் தெரிந்து கொள்ளச் செய்வது, காந்திய செயல்பாடுகளான மதுவிலக்கு, கதர், கிராமத் தொழில் பிரச்சாரம் ஆகியவை இதன் நோக்கமாகும். புதுச்சேரி அரவிந்த ஆசிரமம், அரோவில், வேதாரண்யம் கஸ்தூரிபா குருகுலம், காந்தி கிராமத்திலுள்ள அறக்கட்டளை, கிராமிய பல் கலைக்கழகம், இலட்சுமி சேவா சங்கம், மதுரை காந்தி மியூசியம், கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமம், திருநெல்வேலி காந்தி சங்கம், கன்னியாகுமரி காந்தி மண்டபம், கேரள மாநிலம் நெய்யாற்றங்கரையில் உள்ள ஜி.ஆர். காந்திய நினைவு நிறுவனம், வைக்கம் சத்தியாகிரக நினைவு இடம் மற்றும் பொள்ளாச்சி ந. மகாலிங்கம் அவர்களின் தேசிய இலக்கிய பணி குறித்து அறிதல், இராஜாஜி நிறுவிய திருசெங்கோடு காந்தி ஆசிரமம் போன்ற நிறுவனங்கள் இதில் அடங்கும். யாத்திரை காலத்தில் அவர்களுக்கான போக்குவரத்து, உணவு தங்குமிடம் ஆகிய செலவுகளை காந்தி தரிசன கேந்திரம் ஏற்றுக் கொள்ளும். இதற்காக தனி பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உச்ச நிலைப் பதவிகள்**

திரு.ஆர்.வி. அவர்கள் எப் பொழுதும் எந்தப் பதவியையும் நாடித் தேடிப் போனதில்லை. அவரை நன்கு அறிந்திருந்த காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் தக்க நேரங்களில் சரியாக அவ ரைப் பயன்படுத்திக் கொண்டனர்.

1984ஆம் ஆண்டு ஆகஸ்டு 31இல் இந்தியக் குடியரசின் ஏழாவது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1987 ஜூலை 27 வரை இந்தப் பதவியை வகித்தார். இந்தக் காலத் தில் திருமதி இந்திரா காந்தி, திரு. ராஜீவ் காந்தி ஆகியோர் தலை மையமைச்சர்களாக இருந்தனர்.

இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் என்ற முறை யில் நாடாளுமன்ற மாநில அவை யின் தலைவராகச் செயல்பட் டார். மேலவையை அவர் நடத்திய முறையை எதிர்க்கட்சியினரும் பாராட்டினர்.

மேலும் துணைத் தலைவர் என்ற பதவி முறையில் அவர் டெல்லி பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக் கழகம், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வேந்தராக விளங்கினார். இந்தப் பல்கலைக் கழகங்கள் திறமையாகச் செயல் பட வழிகாட்டி உதவினார்.

1987 ஜூலையில், அவரது கட்சியினரின் வாக்குகளையும் விடக் கூடுதலாக வாக்குகளைப் பெற்று இந்தியக் குடியரசின் எட்டாவது தலைவரானார். இவ ரது செயல்பாடுகள் மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் பெருமை சேர்த்தார்.

இவர் குடியரசுத் தலைவரா கப் பொறுப்பேற்றிருந்த காலம் (ஜூலை 1987 - ஜூலை 1992) இந்திய அரசியல் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான காலம். இவர் தலைவரான பொழுது இந்தியாவின் தலைமை யமைச்சராக ராஜீவ்காந்தி இருந் தார். பொதுத் தேர்தலுக்குப் பின் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. இந்திய அரசியலில் நிலையற்ற போக்கு. மாறிய சூழலுக்கேற்ப வி.பி. சிங், சந்திரசேகர், பி.வி. நரசிம்மராவ் ஆகியோரைத் தலைமையமைச் சர்களாக நியமித்தார். இவரது ஆட்சிக் காலத்தில் நான்கு தலை மையமைச்சர்கள் பதவி வகித்தது, அதற்கு முன்பும் பின்பும் எந்தக் குடியரசுத் தலைவர் காலத்திலும் நடைபெறாத நிகழ்வு ஆகும்.

இவர் இந்தியக் குடியரசுத் தலைவராக சோவியத் ரஷ்யா, மங்கோலியா, நெதர்லாந்து, பின் லாந்து, செக்கோஸ்லோவாக்கியா, சைப்ரஸ், பூடான், டான்ஜானியா, ஜெர்மனி, போர்ச்சுகல், இங் கிலாந்து, ஜப்பான், வியட்நாம், சீனா ஆகிய பல்வேறு நாடு களுக்குச் சென்று வந்தார். சென்ற நாடுகளில் எல்லாம் இந்தியா வைப் பற்றிய நல்லெண்ணம் வளரச் செய்தார்.

இவர் குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில், குடியரசுத் தலைவரின் மாளிகையான ராஷ்டிரபதி பவன் புதிய பொலி வோடு விளங்க ஆவன செய்தார். ஆலமரங்களை நட்டு வளர்த்தார். மாளிகையினுள் சாலையின் இரு பக்கங்களிலும் பெரிய மரங்கள் வளர ஆவன செய்தார். புகழ் பெற்ற இசைக்கலைஞர்களையும் மற்றவர்களையும் அழைத்து கலை நிகழ்ச்சிகள் நடத்தி அவர் களைப் பாராட்டினார். குடியரசுத் தலைவரின் மாளிகையை ஒரு கலைக் கூடமாகத் திகழச் செய்த பெருமை அவரைச்சாரும்.

**ஓய்வுக்குப்பின் உயர்பணிகள்**

1992 ஜூலை 25இல் குடி யரசுத் தலைவர் பதவிக்காலம் முடிந்தது. ஆனால் அதற்குப் பின்பும் ஓயாமல் அவரது பணிகள் தொடர்ந்தன. அவருக்குள்ளிருந்த நாட்டுப் பற்றும் மனிதநேயமும் அவரை இயக்கின. அவரது தொண்டுகள் தொடர்ந்தன.

அவர் ஆர்.வி. அறக்கட்டளை ஒன்றை நிறுவினார். தகுதி வாய்ந்த ஏழை எளிய மாணவர் கள் கல்வி கற்க நிதி உதவி அளித்தார். தேவையான மக்க ளுக்கு மருந்து உதவிகள் வழங்கினார்.

பல்வேறு அமைப்புக்களில் பொறுப்பேற்று வழிகாட்டினார். ஜவஹர்லால் நேரு நிதி, காந்திய தேசிய மையம் ஆகியவற்றில் அறங்காவலராக விளங்கினார். பல்வேறு பன்னாட்டு அமைப்புக் களிலும் பங்கு பெற்றார். தமிழகத் தில் கலாக்ஷேத்திரா, காந்தி கிரா மம், மதுரை காந்தி அருங்கட்சிய கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து வழிகாட்டினார்.

எண்பது வயதுக்கு மேல், தனது ஆன்மீக அறிவைப் பெருக் கிக் கொள்ள கோவையில் சுவாமி தயானந்த சரஸ்வதி நடத்திய வேத வகுப்புக்களில் அமர்ந்து பாடம் கேட்டார். அவருக்கு காஞ்சி காம கோடி பீடத்தின் மேன்மைமிகு பரமாச்சாரியார், "சத் சேவா ரத்னா" என்ற பட்டமளித்துப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

திரு.ஆர்.வி. ஒரு சிறந்த எழுத் தாளர். அவர் காமராஜரோடு சமதர்ம நாடுகளுக்குச் சென்று வந்தார். அதனை "காமராஜரின் சமதர்ம நாடுகளின் சுற்றுப் பயணம்" என்ற தலைப்பில் நூலாக எழுதினார். அதற்கு 1967இல் சோவியத் நாட்டுப் பரிசு கிடைத்தது. குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், அவரது குடியரசுத் தலைவர் கால அனுபவத்தை "எனது ஜனாதி பதி ஆண்டுகள்" (My Presidential Years) என்று ஓர் அருமையான நூலாக எழுதியுள்ளார்.

அவர் தனது தொண்ணூற்று எட்டாம் வயதில் 2009 ஜனவரி 27ஆம் நாள் இறைவனடி சேர்ந் தார்.

திரு.ஆர்.வி. வரலாறாக வாழ்ந்தவர். வரலாறு படைத்தவர். இது அவர் பிறந்த நூறாவது ஆண்டு. அவரது வாழ்க்கையை எண்ணிப் பார்ப்பதும் பேசுவதும், நல்ல தொண்டர்கள் உருவாகத் துணை செய்யும்.

நன்றி : கிராம ராஜ்யம்.

திரு. ஆர்.வி. அவர்களால் வழிகாட்டப்பெற்று நலமடைந்தவர் என்ற நன்றியுடன் இந்த கட்டுரை வெளியிடப்படுகிறது.

- பி.என்.எஸ்.